# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No. 25/2020

2022-ம் ஆண்டு ஜுன் மாதம் 14-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா.50 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பக்கிரிசாமி | வயது | 55 /2022 |
| தகப்பனார் பெயர் | கல்யாணசுந்தரம் | ஜாதி | |
| தொழில் | நகைமதிப்பீட்டாளர் | மதம் | |
| ஊர் | திருமக்கோட்டை | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது திருமக்கோட்டையில் வசித்துக்கொண்டு சிட்டியூனியன் வங்கியில் நகை மதிப்பீட்டாளராக வேலை செய்கிறேன். எனக்கு ஆஜர் 1வது எதிரி சக்திவேலை தெரியும். நான் மன்னார்குடி விஸ்வகர்மா சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறேன். அந்த சங்கத்தில் 1வது எதிரி திருவாரூரில் உறுப்பினராக உள்ளார். அவர் நீதிமன்றத்தில் அவருக்கு தெரிந்த ஒருவர் மூலம் உயர்அதிகாரியிடம் சொல்லி நீதிமன்றத்தில் காலியாக உள்ள அட்டண்டர் வேலை வாங்கி தருவதாக சொன்னார். எனது உறவினர் அனிதா என்பவருக்கு வேலை வாங்கி தருவதாக சொன்னார். ரூ.2 லட்சம் ஆகும் என்றும், அதற்கு முன்பணமாக ரூ.1 லட்சம் தரவேண்டும் என்றும் 1வது எதிரி கேட்டதால் மார்ச் 2018 ம் வருடம் 1வது எதிரியின் வீட்டில் வைத்து நான், அனிதா மற்றும் அனிதாவின் தகப்பனார் போய் பணம் கொடுத்துவிட்டு வந்தோம். அப்போது 1வது எதிரியின் அம்மா, அப்பா, அவருடைய மனைவி மற்றும் குழந்தைகளும் 1வது எதிரியுடன் இருந்தார்கள். ரூ.1 லட்சம் ரொக்கமாக 1வதுஎதிரி வாங்கிக்கொண்டு 1மாததத்தில் வேலை வாங்கி தருவதாக சொன்னார். 2019 ம் வருடம் வரை காத்திருந்தோம். வேலை வரவில்லை. பின்னர் திருவாரூர் எஸ்.பி. ஆபிஸில் கம்ளைண்ட் கொடுக்கலாம் என்று வந்தோம். போலிசார் எங்களை விசாரித்துவிட்டு ஏற்கனவே புகார் கொடுக்கப்பட்டதாகவும், எங்களை சாட்சிகளாக சேர்த்துக்கொள்வதாக சொன்னார்கள். எஸ்.பி. ஆபீஸ் வந்தபோது எங்களை போல் 80 க்கும் மேற்பட்டோர்கள் ஏமாந்ததாக சொன்னார்கள்.

**கு.வி. ( 1வது எதிரி தரப்பில் )**

நான் அனிதாவிற்காக கொடுத்ததாக சொல்லும் தொகையை நான் திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரித்தபோது நான் கொடுத்த ரூ.1லட்சத்தை நான் திரும்ப 1வது எதிரியிடமிருந்து பெற்றுக்கொண்டதாக சொல்லவில்லை. நான் பணத்தை 1வது எதிரியிடமிருந்து திரும்ப பெற்றுக்கொண்டுவிட்டு, தற்போது பணத்தை பெறவில்லை என வழக்கிற்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**கு.வி. ( 2 வது எதிரி தரப்பில் )**

நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விபரத்தைதான் போலிசார் விசாரித்தபோதும் சொன்னேன் என்றால் சரிதான். 1வது எதிரி சக்திவேல் என்னிடம் பொய்யாக கூறிய சங்கதிகளை முன்வைத்து அவருக்கு தெரிந்து ஒருவர் மூலம் நீதிமன்ற உயர் அதிகாரியிடம் சொல்லி வேலை வாங்கி தருவதாக சொன்னார் என பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

# CC No. 25/2020

2022-ம் ஆண்டு ஜுன் மாதம் 14-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா.51 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மகேஸ்வரி | வயது | 45 /2022 |
| கணவர் பெயர் | பக்கிரிசாமி | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | விளக்குடி | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது விளக்குடியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு ஆஜர் 1வது எதிரி சக்திவேலை தெரியும். எங்கள் வீட்டிற்கு அருகில் இளவழகன் என்பவர் அவரது மகள்கள் இருவருக்கும் வேலை வாங்குவதற்காக 1வது எதிரியிடம் பணம் கொடுத்திருப்பதாகவும், எனது மகனுக்கு வேலை வேண்டும் என்றால் பணம் கொடுக்கலாம் என்று சொன்னதால் 1வது எதிரி விளக்குடி வந்தபோது நான் கேட்டேன். கோர்ட்டில் வேலை வாங்கி தருவதாக சொன்னார். 2018 ம் வருடம் மார்ச் மாதம் ரூ.2 லட்சம் பணம் வேண்டும் என்றும், ரூ.1 லட்சம் பணம் முன்பணமாக கொடுக்கவேண்டும் என்று சொன்னார். அதனை நம்பி எனது மகன் பெரமையனுக்கு வேலை வாங்குவதற்காக ரூ.1 லட்சத்தை 1வது எதிரி வீட்டில் வைத்து நான், இளவழகன் மற்றும் எனது மகன் ஆகியோர் கொடுத்துவிட்டு வந்தோம். நாங்கள் பணம் கொடுக்கும்போது 1வது எதிரியின் வீட்டில் அவரது அம்மா, அப்பா, அவரது மனைவி ஆகியோர் இருந்தார்கள். பின்னர் லேட்டாக, லேட்டாக நாங்கள் கேட்டுக்கொண்டிருந்தோம். பணத்தை திருப்பி கொடுக்குமாறு கேட்டதால் 2019-ல் 1வது எதிரி பணத்தை கொடுத்துவிடுவதாக சொல்லி எழுதி கொடுத்தார். ஆனால் இதுவரை பணத்தை திரும்ப கொடுக்கவில்லை. திருவாரூர் எஸ்.பி. ஆபீஸிற்கு விசாரணைக்கு வந்தபோதுதான் நிறையபேரிடம் பணம் வாங்கிய விபரம் தெரியவந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**கு.வி. (1வது எதிரியின் தரப்பில்)**

போலிசார் வரச்சொன்னதால் நான் எஸ்.பி. ஆபீஸ் போனேனா? என்றால் இளவழகன் எஸ்.பி. ஆபீஸ் வரச்சொன்னார்கள் என சொன்னார் அதனால் போனோம். எனது மகன் பெரமையனை போலிசார் விசாரிக்கவில்லை. 1வது எதிரி எனக்கு எழுதி கொடுத்ததாக சொல்லும் பேப்பரை நான் போலிசாரிடம் காட்டினேன். 1வது எதிரி அரசாங்க வேலையில் உள்ளாரா? என்று எனக்கு தெரியாது. எப்படி அரசு வேலை கிடைக்கும் என்று நான்நம்பினேன் என்றால் இளவழகன் என்பவர் இரண்டு மகள்களுக்கு கொடுத்ததாக சொன்னதால், நானும் எனது மகனுக்கு கொடுத்துவிட்டேன். 1வது எதிரி என்னிடம் நேரடியாக வேலை வாங்கி தருவதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. வீட்டிற்கு வந்தபோது வேலை வாங்கி தந்துவிடுவதாக சொன்னார். நான் இளவழகனிடம் யார் மூலம் சக்திவேல் வேலை வாங்கி தருவார் என கேட்கவில்லை. 2 வது எதிரி மூலம் வேலை வாங்கி தருவதாக சக்திவேல் சொன்னாரா என்று நான் இளவழகனிடம் கேட்டு தெரிந்துக்கொள்ளவில்லை. நான் முழு விபரமும் தெரிந்துக்கொண்டு தற்போது 2வது எதிரி கோவிந்தலெட்சுமியை தெரியாது என்று சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் 1வது எதிரியின் வீட்டிற்கு போய் நான் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் பணம் கொடுத்திருந்தால் முன்னரே வழக்கு போட்டிருப்பேன் என்றால் சரியல்ல. இளவழகன் பணத்தை வாங்கி தருவதாக சொன்னதால் நம்பியிருந்தேன். நான் 1வது எதிரியை மையப்படுத்தி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில் )**

நான் முதல் விசாரணையில் சொன்ன விபரத்தைதான்போலிசார் விசாரித்தபோது சொன்னேன் என்றால் சரிதான். 2 வது எதிரியை கோவிந்தலெட்சுமியை நான் பார்த்தது இல்லை என்றால் சரிதான்.

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No. 25/2020

2022-ம் ஆண்டு ஜுன் மாதம் 14-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா.52 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தினேஷ் | வயது | 30/2022 |
| தகப்பனார் பெயர் | கருணாநிதி | ஜாதி | |
| தொழில் | தனியார் கம்பெனியில் வேலை | மதம் | |
| ஊர் | மருதப்பட்டிணம் | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது மருதப்பட்டிணத்தில் வசித்து, தனியார் கம்பெனியில் சூப்ரவைசராக வேலை செய்து வருகிறேன். எனக்கு ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகளை தெரியும். திருவாரூரில் உள்ள செல்வம் என்பவர் அவரது வீட்டில் உள்ள ஆர். ஓ. வாட்டர் பியூரிபையர் சர்வீஸ் செய்தவகையில் பழக்கம். அவர் மூலம் 1வது எதிரி சக்திவேலைதெரியும். 2018 ம் வருடம் பிப்ரவரி மாதம் வாக்கில் செல்வம் எனக்கு போன் செய்து என்ன படித்துள்ளாய் என்று கேட்டார். நான் டிப்ளமோ படித்துள்ளதாக சொன்னேன். கோர்ட்டில் ஓ.ஏ. வேலை இருப்பதாகவும், விருப்பம்உள்ளதா என்று கேட்டார். வீட்டில் கேட்ட பின்னர் எந்த ஊரில் வேலை உள்ளது என்று செல்வத்திடம் கேட்டேன். திருவாரூர், நாகப்பட்டிணம், தஞ்சாவூர் ஆகிய ஊர்களில் வேலை இருப்பதாக சொன்னார். அப்போது மும்பையில் வேலை செய்துக்கொண்டிருந்ததால் 1வது எதிரியிடம் போன் மூலம் பேசினேன். இரண்டு மாதத்தில் வேலை வாங்கி தருவதாகவும், ரூ.3 லட்சம் ஆகும் என்றும், முதலில் 1 லட்சம் கொடுத்துவிடவேண்டும் என்றும், பின்னர் நீதிமன்ற வேலைக்கு சேர்ந்த பின்னர் ரூ.2 லட்சம் கொடுக்க வேண்டும் என்றும் சொன்னார். அதனடிப்படையில் எனது அப்பாவிடம் சொல்லி 1வது எதிரியின் வீட்டிற்கு போய் 1வது எதிரியிடம் ரூ. 1 லட்சததை எனது அபபா கருணாநிதி கொடுத்துவந்தார். எனது அப்பாவுடன் எனது மாமாவும் போயிருந்தார். நான் வேலை கிடைத்துவிடும் என்ற நம்பிகையில் மும்பையில் இருந்த வேலையை விட்டு, விட்டு ஊருக்கு வந்த பின்னர்

1 எதிரியின் வீட்டிற்கு போய் 1,2 எதிரிகளை பார்த்தேன். 2 வது எதிரியும் என்னிடம் அதிகபட்சம் இரண்டு மாதங்கள்தான் ஆகும், வேலை நடந்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னார். அதன் பிறகு காலதாமதம் ஏற்பட்டதால் 1 வது எதிரியின் வீட்டிற்கு போய் கேட்டு வந்தேன். அப்போது ஒரு 1 வது எதியினுடைய அம்மா என்னிடம் கேஸ் ஆகிவிட்டது. கேஸ் முடிந்தவுடன் வேலை கிடைக்கும் என்று சொன்னார். அதன் பின்னர் எஸ்.பி.ஆபிஸ் போலிசார் விசாரித்தார்கள். நடந்த விபரத்தை சொன்னேன். 83 பேர் என்னை போல் மாட்டிக்கொண்டதாக சொன்னார்கள்.

**கு.வி. (1 வது எதிரி தரப்பில்)**

நான் தற்போது முதல் விசாரணையில் சொன்ன விபரத்தைதான் போலிசார் விசாரித்தபோதும் சொன்னேன். நான் 1 வது எதிரியிடம் நேரடியாக பணம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது அப்பா, எனது மாமா மற்றும் செல்வம் ஆகியோர் போய் கொடுத்தார்கள். 1 வது எதிரி அரசு வேலையில் இல்லை என்றால் சரிதான். நான் 1 வது எதிரி வீட்டிற்கு போய் பார்த்தபோது 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி மூலம் வேலைவாங்கி தருவதாக சொன்னார். 2 வது எதிரியும் வேலை வாங்கி தருவதாக என்னிடம் நேரில் சொன்னார். 1, 2 எதிரிகளை நான் 1 வது எதிரியின் வீட்டில் சந்தித்தேன். 2 வது எதிரி 1 வது எதிரிக்கு சொந்தமான காலனியில் வாடகைக்கு குடியிருப்பதாக சொன்னார். நான் கொடுத்ததாக சொல்லும் தொகையை திருவாரூர் ஜட்ஜ் அம்மாவிடம் கொடுத்துவிட்டதாக சொன்னார்கள். மேற்படி விபரத்தை 1 வது எதிரி சக்திவேல் என்னிடம் சொன்னார். அப்போது 2 வது எதரியும் இருந்தார் என்றால் சரிதான். 2 வது எதிரியை நான் ஒருமுறைதான் பார்த்துள்ளேன். அதன்பிறகு 2 வது எதிரியை பார்க்கவில்லை. நான் பணம் கொடுத்து ஏமாந்தது போல் 1 வது எதிரி சக்திவேலும், 2 வது எதிரியிடம பணம் கொடுத்து ஏமாந்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் 1 வது எதிரியை பார்த்தபோது கேஸ் ஆகிவிட்டது. சுரேஷ் என்பவர் புகார் கொடுத்துள்ளதாக சொன்னார். எஸ்.பி. ஆபீஸிலிருந்து போன் செய்து என்னை விசாரணைக்கு வரச்சொன்னார்கள். எஸ்.பி. ஆபீஸிற்கு எனது போன் நம்பரை யார் கொடுத்தார்கள் என்றால், 1 வது எதிரி சக்திவேல் கொடுத்துள்ளார்.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

1வது எதிரியிடம் நான் கொடுத்த பணத்தை திரும்ப கேட்டுகொண்டுள்ளேன் என்றால் சரிதான். கேஸாசிவிட்டது, கோர்ட்டுக்கு போய்விட்டுதான் பணம் திரும்ப வரும் என்று சொன்னார். 1வது எதிரி பணம் தருகிறேன் என்று சொன்ன ஆசைவார்த்தையை நம்பி 2வது எதிரியை வழக்கில் சம்பந்தபடுத்தி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க 1வது எதிரி வீட்டில் 2 வது எதிரியை பார்த்ததாகவும் 2 வது எதிரி வேலைவாங்கி தருவதாக சொன்னதாகவும், அப்போது 2 வது எதிரியும் இருந்ததாகவும், 1வது எதிரி வீட்டில் நேரில் 2 வது எதிரியை சந்தித்ததாகவும், 2 வது எதிரி 1வது எதிரியின் காலனியில் குடியிருப்பதாகவும், பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.